# DEPOSITION OF WITNESS
## (Chapter XXIII Code of Criminal Procedure)
## IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, KARAIKUDI.
## CC. No.1037/2022 P.W.9

| | | | | |
|---|---|---|---|---|
| பெயர்: | : | ஜெயபாண்டி | த-பெ | ராமசுப்ரமணியன் |
| ஊர்: | : | காரைக்குடி | | |
| வயது: | : | 48/2026 | வட்டம்: | |
| தொழில்: | : | குடிமையியல் மருத்துவர் | மாவட்டம் | சிவகங்கை |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of **09.06.2026**

**எதிரி ஆஜர்.**

--------------------------------------------------------------------------------------------

முதல் விசாரணை.

நான் தற்சமயம் காரைக்குடியில் வசித்து குடிமையியல் மருத்துவராக காரைக்குடி அரசு மருத்துவமனையில் பணி செய்து வருகிறேன். கடந்த 17.08.2022 அன்று இரவு 9.25 மணிக்கு நான் பணியில் இருந்தபோது நமிதா வயது 27 க.பெ-ஆதி நாயகன் என்பவர் தெரிந்த நபர் ஒருவர் கையால் அடித்ததாக சிகிச்சைக்கு வந்தார். அவரை உள்நோயாளியாக அனுமதித்து சிகிச்சை மேற்கொண்டதில் இடது மார்பில் வலி உள்ளதாக சொன்னார். அதன் பேரில் ஸ்கேன் எடுத்தபோது அதில் எவ்வித பிரச்சனையும் தென்படவில்லை. இயல்பாக இருந்தது. மேற்படி காயமானது சாதாரண வகையை சார்ந்ததாக இருக்கலாம் என்று சான்று வழங்கினேன். **மேற்படி விபத்து பதிவேடுடன் கூடிய காய சான்றிதழ் அசாஆ 4.** போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**குறுக்கு விசாரணை**

ஒரு கூட்ட நெரிசலில் கல் மீது தவறி விழுந்தால் மேற்படி மார்பில் வலி ஏற்பட வாய்ப்புள்ளதா என்றால் உள்ளது. வலி இருப்பதாக பொய்யாக சொல்ல வாய்ப்பு உள்ளது என்றால் அதை என்னால் சொல்ல முடியாது.

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

KARMEGAKANNAN J

Digitally signed by KARMEGAKANNAN J
Date: 2026.06.09 17:27:13 +0530

குற்றவியல் நீதித்துறை நடுவர்,
காரைக்குடி.